நகராட்சி அலுவலகம்
உசிலம்பட்டி
நாள்21.08.2025

<u>சாதாரனக் கூட்டம்</u>

திருவள்ளுவர் ஆண்டு விசுவாசு வருடம் ஆவணி 13ம் நாள் ஆகஸ்ட் மாதம் நாள்.29.08.2025 வெள்ளிக் கிழமை அன்று காலை 10.15 மணியளவில் உசிலம்பட்டி நகராட்சி நகர்மன்றத் தலைவர்(பொ) மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் அவர்கள் தலைமையில் சாதாரனக் கூட்டம் நகர்மன்ற கூடத்தில் நடைபெற இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

நகர்மன்றத்தலைவர்(பொ) மற்றும்
நகர்மன்ற துணைத்தலைவர்
உசிலம்பட்டி நகராட்சி

---

<u>நகர்மன்றத்தலைவர்(பொ) மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் கொண்டு வரப்படும் சிறப்பு கூட்டப்பொருள்</u>

தமிழக அரசின் முதன்மை செயலாளர்களின் (நகராட்சி நிர்வாகம் மற்றும ஊரக வளர்ச்சி துறை) அவர்களின் கூட்ட நடவடிக்கை கடித எண் 11301/M.A 5(1)/2023-2 நாள் 08.12.2023-இன் படி அரசாணை (2ப) எண் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 01.03.2024-இல் நகராட்சிக்கு சொந்தமான ஊராட்சி ஒன்றிய வசம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சொத்துகளை ( 7 ஏக்கர் 85 சென்ட் நலம்) உடன் நகராட்சி வசம் ஒப்படைக்க ஆணையிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஊராட்சி ஒன்றிய வசம் உள்ள 7 ஏக்கர் 85 சென்ட் நிலம் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டதற்கு தமிழக அரசிற்கு உசிலம்பட்டி நகர்மன்றம் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சர் மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் மாண்புமிகு திரு. K.N. நேரு அவர்கள் ஆகியோருக்கு நகர்மன்றம் சார்பாக நன்றி தெரிவித்து ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

மன்றப்பொருள்-1

தமிழக அரசின் முதன்மை செயலாளர்களின் (நகராட்சி நிர்வாகம் மற்றும ஊரக வளர்ச்சி / துறை) அவர்களின் கூட்ட நடவடிக்கை கடித எண் 11301/M.A 5(1)/2023-2 நாள் 08.12.2023-இன் படி அரசாணை (2ப) எண் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 01.03.2024-இல் நகராட்சிக்கு சொந்தமான ஊராட்சி ஒன்றிய வசம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சொத்துகளை ( 7 ஏக்கர் 85 செண்ட் நலம்) உடன் நகராட்சி வசம் ஒப்படைக்க ஆணையிடப்பட்டுள்ளது. நகராட்சிக்கு சொந்தமான ஊராட்சி ஒன்றிய வசம் உள்ள (7 ஏக்கர் 85 செண்ட் நிலம்) சொத்துக்களை நகராட்சி வசம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்ட மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர். மதுரை அவர்களின் கடிதத்தின் மீது தடை பிறப்பிக்க கோரி திருமதி.ரஞ்சனி, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றிய தலைவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு (W.P (MD) No 31101/2023 தீர்ப்புரை நாள் 11.07.2025-இல் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆணையாளர், உசில்ம்பட்டி ஊராட்சி ஒன்றியம் சொத்துக்கள் ஒப்படைப்பு விபரம் நக எண் 2402/2023/அ2 நாள் 08.08.2025-இல் தனி அலுவலர்/ உதவி இயக்குநர் (தணிக்கை ) அவர்களின் முன்னிலையில் 6 ஏக்கர் 85 செண்ட் நிலம் இந்நகராட்சி ஆணையாளர் வசம் 08.08.2025 அன்று ஒப்படைக்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு பு.செ

மன்றம் அனுமதி வழங்கலாம் பதிவு செய்யப்பட்டது.

(நக எண் 1507/ 1995/இ

தீர்மானஎண் : 877

தீர்மானம் : அலுவலக குறிப்பு பதிவுசெய்யப்பட்டது

மன்றப்பொருள் -2

உசிலம்பட்டி நகராட்சி நகரில் கசடு கழிவு மேலாண்மை துணை விதிகள் (திருத்தம்) 202- நகர்மன்றத் தீர்மானம் எண் 869/நாள் 01.07.2025 அறிவிப்பினை மக்கள் தொடர்வு அலுவலக மூலம் தினச்சுடர் நாளிதழில் விளம்பரம் வெளியிட்டமைக்கு பட்டியல் தொகை ரூ.25725/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 0979/2025/எச்.1)

தீர்மானஎண் : 878

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்-3

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொசுக்கள் மூலமாக பரவக்கூடிய டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல்களை கட்டுப்படுத்தும் பணியாக முதிர் கொசுக்களை ஒழிக்கும் பணியினை மேற்கொள்ள தேவைப்படும் FOURTABLE FOGGING MACHINE (புகை தெளிப்பான் இயந்திரம்) தற்போது உள்ள இயந்திரம் மூன்றும் பழுதாகி பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. புதியது 2 இயந்திரம்வாங்கவும். வாகணம் மூலம் புகை தெளிக்கும் இயந்திரம் பெரியதும் பழுதாகிஉள்ளதால் பழுது நீக்கம் செய்யவும் . அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ.250000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | FOURTABLE FOGGING MACHINE<br>புதியது 2 இயந்திரம் | 130000/- |
| 2 | VEHICLE MONTED<br>(வாகணம் மூலம் புகை தெளிப்பான் இயந்திரம் வருடாந்திர பராமரிப்பு பணிக்கு) | 120000/- |

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

(நக.எண்.0979/2025/எச்.1)

தீர்மான எண் : 879

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்-4

பொதுசுகாதாரம் மக்கள் நோய்த்தடுக்கும் மருத்துவத்துறை ந.க.எண்:54/அ5/2025 அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி எதிர்வரும் காலங்களில் பருவ மழை காலங்கள் தொடங்கப்படுவதால் டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல்களை உருவாக்கக்கூடிய கொசுக்களை ஒழிக்கும் பணியாக கொசுக்கள் உற்பத்தியை கட்டுப்படுத்தும் பனிக்காக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கண்ட பனிகளை மேற்கொள்ள 36 டி.பி.சி பனியாளர்களை மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் பணியமர்த்த நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.54/2025//எச்.1)

தீர்மான எண்: 880

தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்-5

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரமாகும் கழிவுகள் முறை மக்கும் குப்பை, மக்கா குப்பை என தரம்பிரிக்கப்பட்டு செயலாக்கம் செய்யப்பட்டுவருகின்றது இது மறு சுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் கழிவுகளை தனியார் வாகனங்கள் மூலம் சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அனுப்புவதற்கு பிளாஸ்டிக் கழிவுகள் சேகரமாகும் பொழுது. அவ்வப்போது வாகணங்கள் மூலம் அனுப்ப வாகண வாடகை கூலி உத்தேச செலவினத் தொகை ரூ.500000/- ஆகும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

(நக.எண்.2533/2013/எச்.1)

தீர்மான எண் : 881

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

மன்றப்பொருள்-6

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கழிப்பிடங்கள் பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர் மேற்கண்ட கழிப்பிடங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க மகளீர் சுய உதவிக்குழுக்கள் மூலமாக சமுதாய கழிப்பிடங்களை பராமரிக்கும் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

(நக.எண்.2533/2013/எச்.1)

தீர்மான எண் : 882

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்-7

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தொற்று நோய் பரவுவதை தடுக்கவும் நகரில் சேகரமாகும் குப்பைகல்ளை தரம் பிரிந்து மக்கும் குப்பைகளை நுன் உர செயலாக்க மையம் மூலம் செயலாக்கம் செய்வதற்கு . தேவையான கிருமிநாசினிகள் விநியோகம் செய்ய கிழ்க்கண்டவாறு விலைவிகிதம் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பொருட்கள் | தொகை.ரூ(லிட்டர் ஒன்றுக்கு ) |
|---|---|---|---|
| 1 | SREE THAI MOOKAMBIKA EXPORT COIMBATORE | 1.லெமன் கிராஸ் ஆயில்<br>2.ஈ.எம் சொலிசன் | ரூ.2540/-<br>ரூ.1200/- |
| 2 | SRI BALAJI MARKETING DINDIGUL | 11.லெமன் கிராஸ் ஆயில்<br>2.ஈ.எம் சொலிசன் | ரூ.2650/-<br>ரூ.1300/- |

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 645/எப்1/2025)

தீர்மானஎண் : 883

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள்-8

உசிலம்பட்டி நகராட்சியின் 24 வார்டுகளிலும் மாற்றுத் திறனாலிகளில் ஒருவரை நியமன நகர்மன்ற உறுப்பினராக தேர்வு செய்யும் பணிக்கு உரிய தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு பட்டியல் தொகை கிழ்க்கானும் நாளிதழ்களுக்கு வழங்க மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது

KAL PUBLICTIONS PVT LTD :13230

TRINITY MAIL TAMILAGAM :15225

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்1204/22/F1)

தீர்மானஎண் : 884

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்-9

அரசாணை (நிலை) எண் 28 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ... 22.02.2023-இன் படி அடிப்படை கட்டமைப்பு மற்றும் உள் வசதிகள் நிதி 2022-2023-இன் ... உசிலம்பட்டி நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைக்க ரூ.800.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டுப்பட்டு வருகிறது. புதிய கடைகள் கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. பேருந்து நிலையத்தில் தரைத்தளத்தில் 42 கடைகள், முதல் தளத்தில் 8 கடைகள், ஒரு உணவகம் கடைகளுக்கு ஒப்படைக்கும் நாள் முதல் முன் தேதியிட்டு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யவும் மற்றும் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ. 5.00/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

(நக.எண். 31/2024/அ1)

தீர்மான எண் : 885

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

---

மன்றப்பொருள்-10

21வது CPSMC கூட்ட நடவடிக்கைகளின் படி கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2025-2026-இன் கிழ் ரூ.86.00 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு செலவினத் தொகை ரூ.77018/- M/s Bright Advertising நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 439/2025/இ1

தீர்மான எண் : 886

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்-11

15வது மத்திய நிதிக்குழு மானியத் திட்டம் (Tied Grant) 2025-2026-இன் கீழ் ரூ56.00 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவில் தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு செலவினத் தொகை ரூ.25725/- M/s ESS ESS Publication நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண் 836/2025/இ1

தீர்மானஎண் : 887
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

மன்றப்பொருள்-12

மாவட்ட ஆட்சித் தலைவர்/ ஊராட்சிகளின் ஆய்வாளர், மதுரை அவர்களின் கடிதம் நக எண் 351/2021/உ.இ(ஊ) அ2 நாள் 15.12.2023-இல் உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றிய வசம் உள்ள 7 ஏக்கர் 85 செண்ட் நிலத்தினை நகராட்சி வசம் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டதை எதிர்த்து மேற்படி கடிதத்தின் மீது இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்க கோரி திருமதி.ரஞ்சனி உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் அவர்களால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கில் (W.P(MD) No 31101/2023) அரசாணை மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை அவர்களின் கடிதத்தினை ஊர்ஜிதம் செய்தும், ஒன்றிய தலைவரின் கோரிக்கையினை இரத்து செய்தும் தீர்ப்பு வரப்பெற்றுள்ளது.

மேற்படி வழக்கின தீர்ப்புரை மீது Caveate மனு நகராட்சி மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.10000/- திரு.அ.கண்ணன், நகர்மன்ற வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண் 1507/1995/இ1

தீர்மானஎண் : 888
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்-13

மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை , மதுரை அவர்களின் செயல்முறை உத்தரவு நக எண் 86/2025/டி2 நாள் 10.07.2025 -இல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2025-26-இன் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டடுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | பணி விபரம் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | வார்டு எண் 24 கவணம்பட்டி சமுதாய கூடம் அருகில் உணவு கூடம் அமைக்கும் பணி | ரூ.6.00/- இலட்சம் |
| 2 | வார்டு எண் 6 சத்யா நகர் 7 வது தெருவில் பேவர் பிளாக் சாலை (119006R185) | ரூ.6.00/- இலட்சம் |

அலுவலக குறிப்பு
மன்றம் பதிவு செய்யலாம்
(நக எண் 828/ 2025/இ1)

தீர்மான எண் : 881
தீர்மானம் : அலுவலக குறிப்பு பதிவுசெய்யப்பட்டது

---

மன்றப்பொருள்-14

ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2018-2019 (IUDM) திட்டத்தின் கீழ் கடன் மற்றும் மானியத் தொகை ரூ.7303.00 இலட்சம் மற்றும் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.130.00 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 7433.00 இலட்சம் மதிப்பிட்டில் பிரத்யோக குடிநீர் திட்ட பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திட்டம் 25.05.2023 அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு சோதனை ஓட்ட காலம் மற்றும் ஒப்பந்ததாரரின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு காலம் 31.12.2024 உடன் முடிவடைந்தது. 01.01.2025 முதல் நகராட்சி மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.

செயற்பொறியாளர், தமிநாடு குடிநீர் வடிகால் வாரியம் , மதுரை அவர்களின் தொலைபேசி செய்தி நாள் 15.07.2025 மேற்படி திட்டத்தின் கிழ் உசிலம்பட்டி நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் Gas குளோரின் கையிருப்பு இல்லாத காரணத்தினாலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியத்தில் போதிய நிதி வசதி இத்திட்டத்தில் இல்லாத காரணத்தினாலும் உசிலம்பட்டி நகராட்சி மூலம் gas குளோரின் சிலிண்டர் வாங்கி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சீரான குடிநீர் வழங்க வேண்டடியதன் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், நகராட்சி மூலம் Gas குளோரின் சிலிண்டர் வாங்கி வழங்கவும் அதற்காகும் செலவினத் தொகைக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ. 2.90 இலட்சம் நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(நக என் 1828/2023/இ1)

தீர்மானஎண் : 890

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

---

<u>மன்றப்பொருள்-15</u>

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2025-2026-இன் கீழ் (11 எண்ணம் சாலைகளுக்கு ரூ.86.00 இலட்சம் மதிப்பீட்டில் 1.45 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது . மேற்கண்ட பணியில் SOR நகர் மற்றும் டிக்கா நகர் சாலை ஆகிய இரண்டு எண்ணம் சாலைகளில் மழைநீர் வடிகால் அமைப்பதற்கு போதிய வாட்டம் இல்லாமலும் Sill Level ஒரு அடிக்கு மேல் பள்ளமாக உள்ளது. மேற்கண்ட தெருக்களில் மழைநீர் மற்றும் கழிவு நீர் தடையில்லாமல் செல்ல தாழ்வாக உள்ள பகுதிகளில் கிராவல் அமைத்து தரை மட்டத்தினை உயர்த்தி அதன் மேல் மழைநீர் வடிகால் அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ.2.60 இலட்சம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(நக என் 38/2025/இ1)

தீர்மானஎண் : 891

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள்-16

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர். மதுரை அவர்களின் செயல்மறை உத்தரவு நக. எண் 1926/2025/B2 நாள் 16.06.2025 - இல் 15வது மத்திய நிதக்குழு மானியத் திட்டம் (TIED) 2025 26-இன் கிழ்க்கண்ட பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | பணி விபரம் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி ஊரணி மேடு தெரு (119003S077) ஊரணி மேடு முதல் தெரு (119003S078) பி.எம்.டி நகர் 3வது தெரு (119017R144) பி.எம்.டி நகர் 3வது தெரு (119017R145) கனரா பேங்க தெரு (119017R135) கவணம்பட்டி ரோடு (119024R255) ரத்தினசாமி தேவர் தெரு (119010R138) | ரூ.56.00/- இலட்சம் |

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்

(நக எண் 836/ 2025/இ1)

தீர்மான எண் : 812

தீர்மானம் : அலுவலக குறிப்பு பதிவுசெய்யப்பட்டது.

சி. தேன்மொழி.

நகர்மன்றத்தலைவர்(பொ)

நகர்மன்ற துணைத்தலைவர்

உசிலம்பட்டி நகராட்சி

**உசிலம்பட்டி நகராட்சி**
**மேஜை கூட்டப்பொருள்**
**நாள் 29.08.2025**

மன்றப்பொருள்-1

மதுரை மாவட்ட பசுமை குழுத் தலைவர் மற்றும மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவு நக எண் 3661048/2025/ஓய் 4 நாள் 19.08.2025-இல் பேருந்து நிலைய கட்டுமான பணிக்கு ஊராட்சி ஒன்றியத்தால் ஒப்படைக்கப்பட்ட 1 ஏக்கர் நிலத்தில் உள்ள 28 எண்ணம் மரங்களை அரசுவிதிமுறைகளின் படி ஏலம் விட்டு வெட்டி அகற்ற உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி 28 எண்ணம் மரங்களை வெட்டி அப்புறபடுத்த பொது ஏலம்/ ஒப்பந்தபுள்ளி 25.08.2025 அன்று கோரப்பட்டதில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. மூன்று ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஏலதாரர்/ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி. | வைப்புத்தொகை | ஏலம்/ ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.காட்டுராஜா, உசிலம்பட்டி | ரூ.1500/- | ரூ.17500/- |
| 2 | திருமதி.ஆர்.கபினா, உசிலம்பட்டி | ரூ.1500/- | ரூ.16500/- |
| 3 | திரு.பூப்பாண்டி, உசிலம்பட்டி | ரூ.1500/- | ரூ.18000/- |

குறைந்த ஒப்பந்தபுள்ளி தொகை வழங்கிய திரு.பூப்பாண்டி , உசிலம்பட்டி என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

அலுவலக குறிப்பு

தீர்மான எண் : 893

மன்றம் அனுமதி வழங்கலாம்

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(நக எண் 808/2022/இ1)

மன்றப்பொ

**மன்றப்பொருள்.2**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உயர்மட்ட நீர்த்தே தொட்டிகள் 8 எண்ணம் சுத்தம் செய்யவும், நீர்த்தேக்க தொட்டி அமைந்துள்ள இடத்தினை கண்காணிக்கவும், மின் மோட்டார் இயக்குதல் மற்றும் குடிநீர் வால்வு திறந்து மூடுதல், மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் 5 மாத காலத்திற்கு பணியாளர்களை நியமனம் செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்த காலம் 31/08/2025 உடன் முடிவடைவதால் 01/09/2025 முதல் 4 மாத காலத்திற்கு பராமரிப்பு பணிகளுக்கு கிழ்க்கண்ட விபரப்படி பணியாளர்களை நியமனம் செய்யவும் அதற்காகும் செலவினத் தொகை ரூ.5.00/- (இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| குழாய் திறப்பாளர் | - | 3 நபர்கள் |
| பைப் மஸ்தூர் | - | 3 நபர்கள் |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(நக என் /2025/இ1)

தீர்மானஎண் : 894

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்-3**

உசிலம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் மின் மோட்டார் இயக்குதல், குடிநீர் வால்வு திறந்து மூடுதல், மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு போதிய பணியளார்கள் இல்லாத காரணத்தினால் 5 மாத காலத்திற்கு பணியாளர்களை நியமனம் செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்த காலம் 31/08/2025 உடன் முடிவடைவதால் 01/09/2025 4 மாத காலத்திற்கு பணிகளுக்கு கிழ்க்கண்ட விபரப்படி பணியாளர்களை நியமனம் செய்யவும் அதற்காகும் செலவினத் தொகை ரூ.5.00/- (இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

5-

கு

ரம்

ற்கு

| | | |
|---|---|---|
| குழாய் திறப்பாளர் | - | 3 நபர்கள் |
| பைப் மஸ்தூர் | - | 3 நபர்கள் |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(நக என் /2025/இ1)

தீர்மானஎண் : 895

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்- 4

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சின்டெக்ஸ் மற்றும் போர்வெல் அமைந்துள்ள இடங்களில் மின் மோட்டார் இயக்குதல் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு போதிய பணியள்ார்கள் இல்லாத காரணத்தினால் 5 மாத காலத்திற்கு பணியாளர்களை நியமனம் செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்த காலம் 31/08/2025 உடன் முடிவடைவதால் 01/09/2025 முதல் 4 மாத காலத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி பணியாளர்களை நியமனம் செய்யவும் அதற்காகும் செலவினத் தொகை ரூ.5.00/-(இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| குழாய் திறப்பாளர் | - - | 3 நபர்கள் |
| பைப் மஸ்தூர் | - | 3 நபர்கள் |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(நக எண் /2025/இ1)

தீர்மான எண் : 896

தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

மன்றபொருள் - 5

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளில் நகராட்சிக்கு சொந்தமான 125 எண்ணம் சிறு மின் விசை பம்பு மூலம் 0.23 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு மேற்படி 01. முதல் 12வரை வார்டுகளில் உள்ள சிறுமின் விசை பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்ய 5 மாத காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ.5.00/-(இலட்சம்) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(நக எண் /2025/இ1)

தீர்மான எண் : 897

தீர்மானம்: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

மன்றபொருள்.6

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளில் நகராட்சிக்கு சொந்தமான 125 எண்ண சிறு மின் விசை பம்பு மூலம் 0.23 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு மேற்படி 13 முதல் 24 வரை வார்டுகளில் உள்ள சிறுமின் விசை பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்ய 5 மாத காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ.5.00/- (இலட்சம்) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(நக எண் /2025/இ1)

தீர்மானஎண் : 898

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்-7

வைகை பிரத்யோக குடிநீர் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 4.00 முதல் 4.50 MLD அளவு குடிநீர் உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டியில் ஏற்றம் செய்து 01 முதல் 24 வார்டுகளுக்கும் நகராட்சி பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பழைய பகிர்மான குழாய்களில் நீர் அழுத்தம் காரணமாக அவ்வப்போது உடைப்பு ஏற்படுகிறது. மேற்படி பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் வால்வுகளை பழுதுநீக்கம் செய்ய மதிப்பிடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ.5.00 /- (இலட்சம்) மதிப்பீட்டில் (பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(நக எண் /2025/இ1)

தீர்மான எண் : 899

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள் - 8

சிறப்பு நிதி திட்டம் 2025-2026-இன் கீழ் 13 எண்ணம் சாலை பணிகள் ரூ.59.00 இலட்சம் மதிப்பீட்டில் 1.21 கி.மீ நீளத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது . மேற்கண்ட பணியில் பாண்டி கோவில் பிரதான சாலையின் மேல்மட்டம் உயரமாகவும், குறுக்கு தெரு சாலைகள் அனைத்தும் பள்ளமாக இருப்பதால் பிரதான சாலையின் மட்டத்திற்கே குறுக்கு சலைகளின் மட்டத்தை அமைக்க வேண்டியுள்ளதால் , பள்ளமாக உள்ள சாலைகளில் கிராவல் அமைத்து தரை மட்டத்தினை உயர்த்த மதிப்பீட்டில் வழிவகை இல்லாத காரணத்தினாலும் மற்றும் மழைநீர் வெளியே செல்ல வழிவகை இல்லாத காரணத்தினாலும் தரை மட்டத்தினை கிராவல் அமைத்து உயர்த்தி அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு ரூ.4.5 இலட்சம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(நக எண் 38/2025/இ1)

தீர்மான எண் : 100

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

சி. [illegible]

நகர்மன்றத் துணை தலைவர்

மற்றும் நகர்மன்றத் தலைவர் (பொ)

உசிலம்பட்டி நகராட்சி